**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 32** **நாள் : 06.02.2019**

## பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கிடையே 05.02.2019 அன்று ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 211 சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளும், 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் மிகச் சீரிய முறையில் சிறப்புடன் இயங்கி வருகின்றன. சென்னைப் பள்ளிகளில் 2018–19ம் கல்வியாண்டில் 83,619 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். சென்னைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள் 2017–18ம் கல்வியாண்டில் நடைபெற்ற 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 93.36 விழுக்காடும், 11ம் வகுப்பு பொதுத்தேர்வில் 87.61 விழுக்காடும் மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 88.79 விழுக்காடும் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை, மாணவ, மாணவியர்களின் அடைவுத்திறன்களை மேம்படுத்த சிறந்த கல்வியை அளிப்பது மட்டுமன்றி அவர்களின் பன்முகத்திறன்களை மேம்படுத்த பல்வேறு விளையாட்டுகளில் சிறப்பு பயிற்சிகள் அளித்து வருகிறது.

அந்தவகையில், 2018–19ம் கல்வியாண்டிற்கான ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 45,111 மாணாக்கர்களை 10 மண்டலங்களாக பிரித்து உதவி கல்வி அலுவலர் தலைமையில் நடைபெற்ற மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 2,772 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3,63,000/– மதிப்பீட்டில் பரிசுகளும், அனைத்து மண்டலங்களிலும் பயிலும் மழலையர் வகுப்புகளில் பயிலும் (LKG & UKG) குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அதில் வெற்றி பெற்ற 400 குழந்தைகளுக்கு ரூ.80,000/ மதிப்பீட்டில் பரிசாக புத்தகப்பைகளும்,

சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 38,508 மாணவ, மாணவியர்களை 4 கல்வி மாவட்டங்களாக பிரித்து நடத்தப்பட்ட தனிநபர் மற்றும் குழுப்போட்டிகளில் வெற்றி பெற்ற 3,000 மாணாக்கர்களுக்கு ரூ.6,42,600/ மதிப்பீட்டில் பரிசுகளும்,

10 மண்டலங்களில் வெற்றி பெற்ற தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி மாணாக்கர்களுக்கும், 4 மாவட்டங்களில் வெற்றி பெற்ற உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணாக்கர்களுக்கும் 05.02.2019 அன்று காலை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1,32,500/ மதிப்பீட்டில் 318 வெள்ளிப் பதக்கங்கள் முறையே முதல் இடம் (10 கிராம்), இரண்டாம் இடம் (8 கிராம்) மற்றும் மூன்றாம் இடம் (7 கிராம்) என பரிசுகளும்,

தொடக்கப் பள்ளிகள் முதல் மேல்நிலைப் பள்ளிகள் வரை அனைத்து பள்ளிகளில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, புள்ளிகளின் அடிப்படையில் ரூ.47,000 மதிப்பீட்டில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியே தனித்திறன் கோப்பைகளும்,

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இக்கல்வியாண்டில் (2018–19) ஜப்பானிய மற்போர் (Judo) போட்டிகளில் 14 வயதிற்குட்பட்ட பிரிவில் இரண்டு மாணவிகளும், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் ஒரு மாணவியும் மாநில அளவில் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர். குத்துச்சண்டை (Boxing) போட்டிகளில் 17 வயதிற்குட்பட்ட பிரிவில் 1 மாணவனும், 1 மாணவியும் மாநில அளவில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளனர். மாநில அளவிலான சுண்டாட்டப் பலகை (Carrom) போட்டிகளில் சென்னைப் பள்ளிகளில் பயின்று வரும் 14 வயதிற்குட்பட்ட பிரிவில் 2 மாணவிகளும் 19 வயதிற்குட்பட்ட பிரிவில் 2 மாணவர்களும் தங்கப் பதக்கமும், 19 வயதிற்குட்பட்ட பிரிவில் 1 மாணவன் வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளனர். தடகளப் (Athletics) போட்டியில் 19 வயதிற்குட்பட்ட பிரிவில் 1 மாணவன் மாநில அளவில் தங்கப் பதக்கம் வென்று தேசிய அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற தகுதி பெற்றுள்ளார். மேலும், மாநில அளவிலும், தேசிய அளவிலும் 20 மாணவ, மாணவியர்கள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சிறப்பை உயர்த்தி உள்ளனர். மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெற்று, வெற்றிபெற்று பதக்கங்களை பெற்ற மேற்குறிப்பிட்ட 31 மாணவ, மாணவியர்களை சிறப்பிக்கும் வகையில் சிறப்பு பரிசாக கேடயங்களை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், கல்வி அலுவலர், உதவி கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**